வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 08.11.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 312 | பக்கங்கள் : 12




# தமிழர் தேசத்தை அங்கீகரிப்பதே இனப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் அறிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 08

இணைந்த வடக்கு, கிழக்கு தாயகத்தில் தமிழ் மக்களை தனித்துவமான இறைமை கொண்ட தேசமாக அங்கீகரிக்க வேண்டும். அதன் தனித்துவமான இறைமை - சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையின் பிரகாரம் தமிழ்த் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண தொடர்ந்து போராடுவோம் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றைய தினம் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

26 பக்கங்கள் கொண்ட அந்தத் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

இன்று இலங்கைத் தீவை மையமாகக் கொண்ட பூகோள ஆதிக்கப் போட்டியொன்று இடம் பெறுகிறது.

11



கந்தசஷ்டியின் இறுதிநாளான நேற்று வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சூரன் போர் இடம் பெற்றவேளை...! (படம் - ஐ. சிவசாந்தன்)

# ஐ.எம்.எவ். மூன்றாம் கட்ட நிதி 2025 ஜனவரியில் கிடைக்கும்!

## ஜனாதிபதி அநுர நம்பிக்கை

கொழும்பு, நவ. 08

அடுத்த ஆண்டு ஜனவரி இறுதி அல்லது பெப்ரவரி மாத தொடக்கத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது தவணையை இலங்கை பெறும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

11

# ரணிலை கிண்டலடித்த அநுர!

கொழும்பு, நவ. 08

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தோற்ற பின்னர் பெருமளவு சமையல்காரர்கள் தனக்கு தேவை என வேண்டுகோள்

11

# இந்தியாவுடன் பேசுவதற்கு தயாராகவுள்ளது முன்னணி!

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

வடமராட்சி, நவ. 08

இந்தியா வளர்ந்து வரும் வல்லரசு என்ற அடிப்படையில் அதன் தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அடிப்படையில் தமிழ்த் தேசத்தை அதன் பாதுகாப்பு கவசமாக கருதும். தேர்தலுக்கு பின்னர் வடக்கு-கிழக்கில் தனிப் பெரும் கட்சியாக வலுவடைந்து இந்தியாவுடன் பேசுவதற்கும் தயாராக உள்ளோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

11




# இணையவழி மோசடி உடன் முறையிடுங்கள்!

கொழும்பு, நவ. 08

வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்கள் மூலமாக இணையவழி நிதி மோசடிகளில் சிக்கித் தவிக்கும் பொதுமக்கள் பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

dir.ccid@police.gov.lk என்ற ஊடாக பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வு பிரிவுக்கு மின்னஞ்சல்களை அனுப்புவதன் மூலம் முறைப்பாடுகளை பதிவு செய்யலாம்.

பேஸ்புக் மற்றும் வட்ஸ்அப் போன்ற சமூக ஊடக கணக்குகளை ஹக் செய்வதன் மூலம் பொதுமக்கள் நிதி மோசடி செய்யப்படுவதாக பல முறைப்பாடுகள் வந்ததை அடுத்து

11

# லொஹானின் மறியல் நீடிப்பு

கொழும்பு, நவ. 08

கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோர் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை

11










உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

சமஷ்டி அரசமைப்புக்கும் ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் எமது ஆட்சியில் ஒருபோதும் இடமளியோம் - என்று கூறியுள்ளார் அரசாங்க பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத்.

இதில், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் எம். பியுமான உதய கம்மன்பில, போன்றவர்கள் தமது வீழ்ந்துபோன வாக்குவங்கியை அதிகரிப்பதற்காக இதுபோன்ற இனவாதத்தை கிளப்பும் விடயங் களை திரும்பத் திரும்பக் கூறினா லும், அவை இப்போது சிங்கள மக்கள் மத்தியிலும் பெரிதாக எடுபடுவதாக இல்லை. ஆனாலும் அவர் கூறுகின்ற விடயங்களை இந்த ஊடகவியலாளர்கள் மறந்து விடுவதாக இல்லை. திரும்பத் திரும்ப அவர்கள், அதனை நிராக ரித்தாலும் தொடர்ந்து அதுபற்றி கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

தேர்தல் முடிந்த பின்னர் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப்பெரும் பான்மை கிடைக்காவிட்டால், தமிழ் அரசு கட்சியுடன் சேர்ந்து ஆட்சியமைப்பது பற்றியும் தமிழ் அரசு கட்சிக்கு முக்கிய அமைச்சர் பதவி கொடுக்கப்படவிருக்கின்றது என்றும் கம்மன்பில கூறியமை செய்தி ஆகியதும், அதுபற்றி சுமந் திரனிடம் இங்கு ஊடகவியலா ளர்கள் கேள்வி எழுப்பியபோது, தமிழ் அரசு கட்சியில் அமைச்சு பதவி ஏற்பது என்பது இல்லாத விசயம் அல்லவே என்றும் பதில் அளித்திருந்தார்.

அதேவேளை, கம்மன்பிலவின் பேச்சை உடனடியாகவே மறுத்த, ஜே. வி. பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, அப்படியொரு பேச்சும் நடக்கவில்லை என்றும், தமது அரசாங்கத்ததில் வேறு எந்தக் கட்சியினருக்கும் பதவி கொடுக்கப்போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தப் பேச்சை தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் ஹரிணி அமரசேகரவும் முல்லைத்தீவில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து மறுத்ததுடன், இருபத்தி ஐந்து பேர்களை கொண்ட தமது அமைச் சரவையில் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்கள் மாத்திரமே இடம் பெறுவார்கள் என்றும் கூறியிருந் தார்.

ஆனால், நெருப்பில்லாமல் புகை வராது என்பது போல, எங்கோ ஒரு பொறி பறந்ததால்தான் இந்த புகை வந்தது என்பதையும் நாம் நிராகரிக்க முடியாது.

அப்படி பேசியிருந்தாலும்கூட, இப்போது அதனை ஏற்றுக்கொள் வது என்பது தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரை தற்கொலைக்கு ஒப்பானது என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

தமது கட்சி அறுதிப்பெரும் பான்மையைப் பெறும் என்று மட்டுமல்ல, தமது கட்சியின் இலக்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெறுவதுதான் என்று தேசிய மக்கள் சக்தியும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக் கவும் கூறிக்கொண்டிருக்க, கம்மன் பிலவின் கூற்றை இப்படி மறுக்க வில்லை என்றால், அவர்களே, தமக்கு பெரும்பான்மை கிடைக் காது என்று நம்புவதாக ஆகிவிடும். இதனால் அவர்கள் இவ்வாறு அதனை மறுக்கவேண்டியது அவசியமானதுதான்.

இதேபோல, தான் அமைச்சரா கப் போகின்றேன் என்றால், அது தனக்கு வடக்கில் சாதகமான நிலையை ஏற்படுத்தும் என்று நினைத்த சுமந்திரன், முதலில் அதனை மறுக்காமல், தனக்கே உரிய பாணியில், “தமிழ் அரசு கட்சியில் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதில்லை என்பது கொள்கையாக இல்லை”, என்று கூறியவர், தனது அந்த யோசனைக்கு கட்சிக்குள் இல்லாவிட்டாலும், தமிழ் அரசு ஆதரவாளர்கள் மத்தி யில் கடும் எதிர்ப்பு தோன்றியதை அவதானித்ததும், இப்போது அந்தர் பல்டி அடித்து புதிய கதையை கூறியிருக்கிறார்.

தாங்கள் அமைச்சராக நினைத் திருந்தால், நல்லாட்சி அரசிலேயே அமைச்சராகியிருப்போம் என்று இப்போது சுமந்திரன் கூறுவது கேட்பவர்களுக்கு சரியாகவும் நியா யமான வாதமாகவும் இருக்கலாம். ஆனால், நல்லாட்சி அரசின் காலத் தில் கூட்டமைப்பின் தலைமைத் துவக் கூட்டங்களில் பல தடவை கள் அமைச்சர் பதவியை ஏற்கவேண் டும் என்று சுமந்திரன் வலுயுறுத் தியபோதிலும் அதனை சம்பந்தன் எந்தக் கட்டத்திலும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் என்கி றார் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக்கட்சி யாக இருந்த கட்சி ஒன்றின் தலைவர்.

அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது:

சுமந்திரனுடன் தாங்கள் எந்த வித பேச்சும் நடத்தவில்லை என்பதை மட்டுமல்ல, இப்போது அமைச்சரும் அமைச்சரவை பேச்சா ளருமான விஜித ஹேரத் தெரிவித் திருப்பது முக்கியமான ஒன்று. “சமஷ்டி அரசமைப்புக்கும் ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத் துவதற்கும் எமது ஆட்சியில் ஒருபோதும் இடமளியோம்”, என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். இதில், ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத் துவதற்கு தாம் இடமளிக்கப்போவ தில்லை என்று அவர் தெரிவித்தி ருப்பது ஆச்சரியத்துக்கு உரியதல்ல. ஆனால், அவர் சமஷ்டி அரசமைப் புக்கு இடமளிக்கப்போவதில்லை என்று கூறியிருப்பது நாம் கவனிக்க வேண்டியது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதி பதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ் ஞாபனத்தில் ஒரு விடயம் தெளி வாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதாவது, நல்லாட்சி அரசின் காலத்தில் தயாரிக்கப்பட்டு இடை யில் நின்றுபோன புதிய அரசமைப்பு சட்டத்தை முழுமைப்படுத்தி புதிய அரசியல் அமைப்பு சட்டத்தை கொண்டுவருவோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அப்படி நல்லாட்சி அரசின் காலத்தில் தயாரிக்கப்பட்ட அந்த அரசியலமைப்பு வரைவு, ஒற்றை யாட்சி முறையைத்தான் கொண்டி ருந்தது என்பதையும் அதனால்தான் அவர்கள் அதனை இறுதி செய்வோம் என்று சொன்னார்கள் என்பதையும் விஜித ஹேரத் மறைமுகமாக உணர்த்தி சொல்லியிருக்கிறார்.

இதற்கு பின்னரும் இங்கு சிலர், புதிய பாராளுமன்றம் அமைந்தவு டன் புதிய அரசு அந்த அரசியல மைப்பு சட்டத்தை முழுமைப்படுத் தப்போகின்றது. அதற்காக என்றா லும் சிலர் பாராளுமன்றம் போக வேண்டும் என்று கூறிக்கொண்டு இருப்பதுதான் புரியவில்லை. அப்படியெனில் முன்னணியினர் கூறுவதுபோல, தமிழ் அரசு கட்சி நமது பிரச்னைக்கு தீர்வாக ஒற்றை யாட்சியைத்தான் திணிக்கப்போகின் றதோ என்று கேட்பதிலும் நியாயம் இல்லாமல் இல்லை.!

- ஊர்க்குருவி.

## பாராளுமன்ற தேர்தலில் பிரசாரம் குறைவு
### பவ்ரல் பணிப்பாளர் ரோஹண தகவல்

கொழும்பு, நவ. 08

பாராளுமன்றத் தேர்தலில் 8 ஆயிரத்து 888 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும் ஆயிரத்துக்கும் குறைவான வேட்பாளர்களே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது அரசியல் ஈடுபாடு குறைவடைந் துள்ளதை வெளிப்படுத்துகின்றது எனவும் அவர் கூறினார்.

இது மக்களுக்கு அரசியல் ஈடுபாடு குறைவடைந்துள்ளதை காண்பிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலில் ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்களின் அபிப் பிராயங்கள் மாற்றமடைந்துள்ளமையும், பாரம்பரிய கட்சி கட்டமைப்பு குறித்த அதிருப்தியும் இதற்குக் காரணம்.

வழமையாக வாக்காளர்களை உள்வாங்கு வதற்காக 600,000 கட்சி அலுவலகங்களை அமைப்பார்கள், ஆனால், இம்முறை 9,241 கட்சி அலுவலகங்களே இயங்குகின்றன.

பொதுச் சொத்துகள் துஷ்பிரயோகம் போன்றவை தற்போதும் காணப்படுகின்ற போதிலும் ஆபத்தான கட்டத்தை அவை நெருங்கவில்லை.

25 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள் ளன அவையும் ஆபத்தான கட்டத்தை அடை யவில்லை என ரோஹண குறிப்பிட்டார்.(எ)

## 2ஆம் மொழி கற்கையை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்

மன்னார், நவ. 08

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வடக்கு மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்ட 150 மணித் தியால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அரச உத்தி யோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வுகள் நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்றன.

புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மண்டபத்தில் சிரேஷ்ட மொழிப் பாட தேசிய வளவாளர் நு. சாகரிகா பிகிறாடோ தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற் றது.

இதில் சிறப்பு விருந்தினர் களாக, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் டிலான் ரணசிங்க, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவ னத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அஸ்வின் பாலகிருஷ்ணன் மற்றும் இரண்டாம் மொழி பாட வளவாளர் சுபாஜினி விநா யகமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சிங்கள கற்கை நெறிகளை பூர்த்தி செய்த பயிலுநர்களின் கலை நிகழ்வுகளும் நடந்தன. (எ)

பாராளுமன்றத் தேர்தல் 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தேசியம் - சூழலியம் - சுயநிர்ணயம்
அரசியலில் தமிழ்த் தேசியச் செழுமை!
அபிவிருத்தியில் நிலைபேறான முழுமை!
சுற்றுச்சூழலில் காணுமிடமெல்லாம் பசுமை!
01


நா.பார்த்தீபன்
கூட்டுறவாளர்
06
தமிழ்த் தேசிய அரசியலில் ஒலிக்கும்
ஒரேயொரு பசுமைக்குரல்
பொ.ஐங்கரநேசன் M.Sc, PGDJMC
சுயேச்சைக் குழு - 14
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.11.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேசிய மக்கள் சக்தியும் பாராளுமன்றத் தேர்தலும்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அடுத்த வாரத்தைய பாராளுமன்றத் தேர்தலில் கைப்பற்றக்கூடிய ஆசனங்களின் எண்ணக்கை தொடர்பில் பல்வேறு கணிப்பீடுகளை அரசியல்வாதிகளும் அவதானிகளும் வெளியிடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களித்த பாங்கை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீட்டைச் செய்பவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு பாராளு மன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை (113 ஆசனங்கள்) கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறுகிறார்கள். அந்தத் தேர்தலில் திஸநாயக்க வுக்குக் கிடைத்த 56 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை சமூகங்கள் அளித்த வாக்குகளும் அடங்குகின்றன.

அதே வாக்குகள் பாராளுமன்றத் தேர்தலில் இரு மாகாணங்களிலும் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்குக் கிடைக்குமா அல்லது ஜனாதிபதியாக திஸ நாயக்க பதவிக்கு வந்த பின்னர் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் ஏற்பட் டிருப்பதாகக் கருதப்படும் மனமாற்றம் காரணமாக மேலும் கூடுதல் வாக்கு கள் கிடைக்குமா என்பது ஒரு முக்கியமான கேள்வி.

திஸநாயக்கவின் ஒன்றரை மாதகால ஆட்சியில் குறைபாடுகளை கண் டுபிடித்து விமர்சனங்களைச் செய்யும் எதிரணிக் கட்சிகள் நாடு எதிர்நோக் குகின்ற சவால்களை செயல்திறனுடன் கையாண்டு நீண்ட நாட்களுக்கு ஆட்சிசெய்யக்கூடிய ஆற்றலும் அனுபவமும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்குக் கிடையாது என்ற எதிர்மறையான செய்தியையே பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் மக்கள் முன்கொண்டு செல்கின் றன. அது விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் வெவ்வேறு முகாம்களில் இருந்தாலும் ஒற்றுமையாகவே நடந்து கொள்கிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்திக்கு மக்களிடம் இருந்த ஆதரவில் ஒரு குறைவுக்கான அறிகுறி தெரிவது போன்ற ஓர் எண்ணத்தையும் உருவாக்க அந்த இரு தலைவர்களும் முயற்சிக்கிறார்கள். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியையே அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தலிலும் ஆதரித்து ஆட்சிக்குக் கொண்டுவரும் வழக்கத்தில் இருந்து இந்தத் தடவை மக்கள் விலகுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஜனாதிபதி திஸநாயக்க தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக அவரின் கட்சி அரசாங்கத்தை அமைக்கக்கூடியதாக பெரும்பான்மையான மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், புதிய அரசமைப்பை கொண்டுவரப்போவதாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தருமாறு தற்போதைய தேர்தல் பிரசாரங்களில் மக்களிடம் ஆணை கேட்பதை பெரும்பாலும் தவிர்க்கிறது. தங்களுக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மையோ மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ தேவையில்லை. சட்டங்களையும் பட்ஜெட்களையும் நிறைவேற்றுவதற்கு உறுதியான ஒரு பெரும்பான்மை பலம் கிடைத்தால் போதும் என்று அதன் தலைவர்கள் கூறுகிறார்கள்.

அதேவேளை, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.)வின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தேசிய மக்கள் சக்தி தேசிய அரசாங்கத்தையோ அல்லது கூட்டரசாங்கத்தையோ அமைக்கப்போவதில்லை என்று கூறுகி றார். பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப்பெரும்பான்மை கிடைக்காமல் போகும் பட்சத்தில் இந்த நிலைப்பாட்டில் எவ்வாறு அவர்க ளால் உறுதியாக நிற்க முடியும்?

மறுபுறத்தில் ஜனாதிபதியும் அமைச்சர் விஜித ஹேரத்தும் பாராளுமன் றத்தை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களால் நிரப்புமாறும் எதிர்க் கட்சியே தேவையில்லை என்றும் கூறினார்கள். அவர்கள் மத்தியில் ஏதோ ஒரு குழப்பநிலை தெரிகிறது.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2024**



"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம்அவற்றைக் கொண்டிருப்போம்"
- பிராங்க்லோயிட்றைற்
(அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

# வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனுடன் கால்நடை வைத்திய அதிகாரிகள் சந்திப்பு



யாழ்ப்பாணம், நவ. 08

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுடன் வடக்கு மாகாண அரச கால் நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத் தின் தலைவர் எம். முரளி தாஸ், செயலாளர் எஸ். சுகிர் தன், உபதலைவர் எஸ். கிருபா னந்தகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கால்நடை பண்ணையா ளர்களுக்கு உச்சபட்ச சேவை வழங்குவதற்கு தடையாக வுள்ள பல இடர்பாடுகள் தொடர்பில் குறித்த சங்கத் தினர் ஆளுநருக்குத் தெரியப் படுத்தினர்.

முக்கியமாக விலங்குக ளுக்கு சிகிச்சையளிப்ப தற்குத் தேவையான மருந்து கள் இன்மையும் அது தொடர் பான பொருத்தமான பொறி முறை இன்மை தொடர் பாகவும் வாகனப் பற்றாக் குறை மற்றும் சாரதிகள் இன்மை தொடர்பாகவும் கால்நடை வைத்தியர்களின் இடமாற்ற சபையில் சங்கத்தின் உறுதியான பிரசன்னத்தின் அவசியம் மற்றும் கால்நடைகளுக்கு வழங்கும் தீவனங்களின் தரத்தின் உறுதிப்பாடு தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கால்நடை உற் பத்தி சுகாதாரத் திணைக் களமும் கால்நடை வைத்தி யர்களும் மாகாணம் முழு தும் நடைமுறைப்படுத்தும் சேவைகள் தொடர்பாகவும் சட்டவிரோத சிகிச்சையாளர் களால் பண்ணையாளர் களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டுள் ளது.

மேலும், கால்நடை வைத் தியர்களின் பற்றாக்குறை, ஏனைய ஊழியர்களின் தேவைப்பாடுகள் தொடர் பிலும் பண்ணையாளர்களின் அத்தியாவசிய தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டி யதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

இவைகள் தொடர்பில் சாதகமாக பதிலளித்த ஆளுநர் வேதநாயகன், உடனடியாக செய்யக் கூடியவற்றை செய்வதாகவும் ஏனைய வற்றை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்க்க முனைவதாகவும் உறுதிய ளித்துள்ளார். (எ)

# பரந்தன் இரு இளைஞர்கள் படுகாயம்

கிளிநொச்சி, நவ. 08

கிளிநொச்சி, பரந்தனில் பட்டா ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து இடம்பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கி வந்த பட்டா ரக வாகனமும் பரந் தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேற்று முற்பகல் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்தது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாய மடைந்த நிலையில் கிளி நொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர் பில் கிளிநொச்சி பொலிஸ ார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேஷம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புண்ணியஸ்தலம் சென்று வருவீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். வீண்பழிக்கு ஆளாவீர்கள். விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**மிதுனம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த லாபம் வரும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**சிம்மம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும்.

**கன்னி**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**விருச்சிகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உதவிகள் கிடைக்கும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். .

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. திடீர் பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். உறவினர்களால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனத்தில் கவனம் தேவை.

**கும்பம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசிகிட்டும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப் படுவீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**மீனம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர், நண்பர்களால் அனுகூலம் உண்டு. பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். சாதிக்கும் நாள்.

# மன்னார் மனித புதைகுழியில் 'ஸ்கான்' செயல்பாடு ஆரம்பம்

## காணொலிகள், படங்கள் எடுக்கத் தடை

மன்னார், நவ. 08

மன்னார் நகர மையப்பகுதியில் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சதொச மனித புதைகுழி அகழ்வுப் பணியானது மீண்டும் ஆரம்பிக்கவுள்ள நிலையில் முதற்கட்டமாக தடயப் பொருட்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கை மற்றும் புதைகுழியை சூழவுள்ள பகுதியை ஸ்கான் மற்றும் அகழ்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக மன்னார் சதொச வளாகத்துக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருந்த பல நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடம் அமைந்துள்ள பகுதியிலும் அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இருப்பினும் குறித்த அகழ்வுப் பணி, ஸ்கான் செயல்பாடுகளை படமோ, காணொலியோ பதிவு செய்ய மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

சதொச மனித புதைகுழி அகழ்வுப் பணியை செய்தி சேகரிக்க பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த அகழ்வுப் பணி தொடர்பான உண்மையான விடயங்களை அறிக்கையிடவும் அகழ்வுச் செயல்பாடுகளை ஆவணப் படுத்தவும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது அகழ்வுப் பணியையோ அல்லது புதைகுழி தொடர்பிலான ஏனைய செயல்பாடுகளை கணொலியோ, படமோ எடுக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, குறித்த அகழ்வுப் பணி தொடர்பிலும், புதைகுழி வழக்கு தொடர்பிலான செயல்பாடுகள் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர்சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி கள் குரல் பதிவுகளை வழங்கவும் மறுத்து வருகின்றனர். (எ)

# வல்லையில் பனம் விதைகள் நடுகை

வடமராட்சி, நவ. 08

வடமராட்சி வல்லைப் பகுதியில் பனம் விதைகள் நடுகை செயல்திட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை வடமராட்சி ஊடக இல்லத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் சமூகச் செயல்பாட்டு திட்டத்துக்கமைவாக பனம் விதைகள் நடுகை திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.



பனம் விதைகள் நடுகைத் திட்டத்தின் முதற்கட்டமாக, வடமராட்சி வல்லைப் பகுதியில் (யாழ். பீச் ஹோட்டல் அருகாமையில் இருந்து தொண்டைமானாறு வீதி சந்திப்பு வரை) பருத்தித்துறை - யாழ்ப் பாணம் பிரதான வீதியின் இரு மருங்கிலும் இரண்டாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (எ-02)

# ஜனரஜ சங்கத்தின் பரிசளிப்பு விழா வவுனியாவில் சிறப்பாக நடைபெற்றது






வவுனியா, நவ. 08

இலங்கை ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் பரிசளிப்பு விழா வவுனியா கொறவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, 2023ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தேர்ச்சிபெற்றவர்கள் மற்றும் 2022ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் என 200 பேருக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் மருத்துவமனை பணிப்பாளர்கள், தாதியர்கள், மேற்பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

# நீதிமன்றில் இலஞ்சம் பெற்ற சிறை அலுவலர் மறியலில்!

மன்னார், நவ. 08

மன்னார் நீதிமன்றத்தில் வைத்து இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வவுனியா சிறைச்சாலை அலுவலர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தரை இன்று 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த சிறைச்சாலை அலுவலர் மன்னார் நீதிமன்ற தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை பார்வையிடுவதற்காக சென்ற பெண் ஒருவரிடம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபரை பார்வையிடுவதற்காக 1000 ரூபாய் பணத்தை பலவந்தமாகப் பெற்றுள்ளார்.

பாதிக் கப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்ததையடுத்து கைது செய்யப்பட்ட சிறைச்சாலை அலுவலர், விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் முன் னிலையில் முற்படுத்தப் பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், இலஞ்சம் பெற்ற அலுவலரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலை ஒழிப்பதற்கு பிரிட்டன் முழு ஆதரவு!

## ஜனாதிபதியின் செயலர் - தூதுவர் சந்திப்பு



கொழும்பு, நவ. 08

**சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை பிரித்தானிய அரசாங்கம் பாராட்டுவதாகவும், ஊழல் மோசடிகளை ஒழித்துக் கட்டுவதற்கான அரசாங்கத்தின் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கான உதவிகளை வழங்கத் தயாரெனவும் பிரித்தானிய தூதுவர் அன்ட்ரு பெட்றிக் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ட்ரு பெட்றிக் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுவாக தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதாக பிரித்தானிய தூதுவர் இதன் போது தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் பிரித்தானியாவில் காணப்படும் முறைமை முக்கியமானது என்றும், அந்த முறையில் ஊழல் மோசடிகளை மட்டுப்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டிய பிரித்தானிய தூதுவர், பிரித்தானிய பாராளுமன்ற முறைமைகள் குறித்து இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களை தெளிவூட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் என்றும் வலியுறுத்தினார்.

# தபால் வாக்காளர்களுக்கு இன்று இறுதிச் சந்தர்ப்பம்

கொழும்பு, நவ. 08

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு, தபால் மூலம் வாக்களிக்க தவறிய அரச சேவையாளர்களுக்கான தபால் மூல வாக்குப் பதிவு நடவடிக்கைகள் இன்றும் இடம் பெறவுள்ளன.

ஒக்ரோபர் 30 மற்றும் நவம்பர் 1 மற்றும் 04 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிக்க முடியாத முப்படை இராணுவ முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களின் வாக்காளர்களுக்கும் இன்று தபால் வாக்குகளை அடையாளப்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வாக்களிக்கத் தவறிய அரச சேவையாளர்கள் தங்களது பிரதேசத்திற்குட்பட்ட மாவட்ட தேர்தல் காரியாலங்களில் வாக்குப் பதிவை மேற்கொள்ள முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(அ)

# சகல குற்றங்களிலிருந்தும் மருத்துவர் ஷாபி விடுதலை!

கொழும்பு, நவ. 08

குருநாகல் போதனா மருத்துவமனையின் சிரேஷ்ட மகப்பேறு மருத்துவ நிபுணர் ஷாபி சிஹாப்தீன் அனைத்து குற்றங்களிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டார்.

சந்தேகத்திற்கிடமான முறையில் சொத்துகளை குவித்தமை, சட்டவிரோத கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தல், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்று அவர் மீது சுமத்தப்பட்ட சகல குற்றச்சாட்டுகளிலிருந்தும் மருத்துவர் ஷாபியை நேற்று முன்தினம் குருநாகல் நீதிவான் நீதிமன்றம் விடுதலை செய்தது.

வழக்கில், முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த குருநாகல் நீதிவான், வழக்குக்கான போதிய ஆதாரங்கள் இல்லாததால் வழக்கைத் தள்ளுபடி செய்யவும் உத்தரவிட்டார். (ஐ)

# அறுகம்குடா சம்பவம் தொடர்பில் விசாரணை வேட்டை தொடர்கிறது!



கொழும்பு, நவ. 08

'அறுகம்குடா தாக்குதல் திட்டம் தொடர்பான சம்பவம் தொடர்பில் இதுவரையில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளும் தொடர்கின்றன." - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

'அறுகம்குடா சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல் உண்மையானதா, அல்லது எவரேனும் போலியான தகவலை வழங்கியுள்ளனரா? இதன் உண்மை தன்மை என்ன என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

அறுகம்குடா சம்பவம் தொடர்பில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன. நீதிமன்றத்துக்கும் தகவல்களை வழங்கியுள்ளோம். விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. எனவே, உண்மையா, பொய்யா என்பதை தற்போதே கூறிவிட முடியாது-என்றார்.

(அ)

கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவாக

# மன்னாரில் போராட்டம் நடத்தியவர்களை எச்சரித்தது தேர்தல் கண்காணிப்பு குழு!

மன்னார், நவ. 08

மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தியவர்கள், தேர்தல் கண்காணிப்புக் குழுவினரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக, பொது மக்களாலும் பொது அமைப்புகளாலும் கனிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில், நேற்று முன் தினம் தலைமன்னார் பிரதான வீதி எருக்கலம்பிட்டி பகுதியில் கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து குழு ஒன்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

இந்த நிலையில் மன்னார் தேர்தல் கண்காணிப்பு குழுவுக்கு கிடைக்க பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய அப்பகுதி விஜயம் மேற்கொண்ட குழுவினர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான போராட்டங்கள் மேற்கொள்ள முடியாது என்பதால் இப்பகுதியில் இருந்து கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தியிருந்தது.

இருப்பினும் அவர்கள் அகன்று செல்லாததுடன் தேர்தல் உத்தியோகத்கர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அரச சேவைக்கும் தேர்தல் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால் கைது செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அப்பகுதியில் இருந்து கலைந்து சென்றனர்.

குறித்த போராட்டத்தில் கலந்துகொள்ள அழைத்து வரப்பட்டவர்களுக்கு வெளிநாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று நபருக்கு 3000 ரூபா வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# போலி இலச்சினைகளை பயன்படுத்திய பெண்ணுக்கு பிணை!

கொழும்பு, நவ. 08

உத்தியோகபூர்வ இலச்சினைகளை மோட்டார் வாகனத்தில் போலியாகப் பயன்படுத்திய பெண் ஒருவர், கண்டி நீதிமன்றத்தால் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு, மற்றும் அரச இலச்சினை முதலானவற்றை தனது வாகனத்தில் காட்சிப்படுத்திய பெண் ஒருவரை கண்டிப் பொலிஸார் கைதுசெய்து கண்டி நீதவான் முன் ஆஜர் செய்தனர்.

முறைப்பாட்டை விசாரித்த கண்டி மேலதிக நீதவான் 5 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட இரண்டு சரீரப்பிணைகளை வழங்கி சந்தேக நபரை விடுதலை செய்தார்.

மேற்படி முறைப்பாட்டில் சந்தேக நபராக பெயரிடப்பட்டவர் கண்டி, அனிவத்தை பகுதியில் வசிக்கும் பிரபல வர்த்தகராவார். (அ)

# துப்பாக்கி மீளளிக்கும் காலஅவகாசம் நீடிப்பு

கொழும்பு, நவ. 08

பாதுகாப்பு அமைச்சகத்தால் வழங்கப்பட்ட உரிமம் கொண்ட துப்பாக்கிகளை மீண்டும் கையளிக்க வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நவம்பர் 21ஆம் திகதிக்கு முன்னர் துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிகளை மீண்டும் கையளிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு ஒரு மாத கால அவகாசம் வழங்கியதுடன் அந்த காலம் நேற்றுடன் நிறைவடையவிருந்தது.

எவ்வாறாயினும், முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்டு, காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர் பாதுகாப்பிற்காக உரிமத்துடன் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை பரிசீலனை செய்த பின்னர், மீளப்பெறுவதைக் கருத்தில் கொண்டு துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடற்படையின் வெலிசறையில் அமைந்துள்ள அரசாங்கத்தின் வர்த்தக வெடிபொருள் களஞ்சியத்திற்கு இந்த துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் பெருமளவிலான மக்கள் துப்பாக்கிகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# இந்திய வீட்டுத் திட்டத்தை பார்வையிட்ட சந்தோஷ் ஜா

கொழும்பு, நவ. 08

பதுளை நாரங்கல இந்திய வீட்டுத் திட்டத்தை இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன் தினம் பார்வையிடச் சென்றதுடன், பயனாளிகளின் குடும்பங்களுடனும் கலந்துரையாடினார்.

இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்துக்கு கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட 750 மில்லியன் இந்திய ரூபா நிதி ஒதுக்கீட்டின் பல்துறைசார் உதவியின் கீழ் சூரிய மின்கல விளக்குகள் வழங்கப்பட்டன.

அத்துடன் பிரதேச வைத்தியசாலைகளுக்கும், சுகாதார நிலையங்களுக்கும் வைத்திய உபகரணங்கள் மின்பிறப்பாக்கிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்களும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு அங்கிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டதாக சந்தோஷ் ஜா, தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துடன் செயல்பட்ட அனைவரும் இந்த தேர்தலில் நிராகரிக்கப்படவேண்டும்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை

கிளிநொச்சி, நவ. 08

கடந்த காலத்தில், அரசாங்கத்துடன் செயற்பட்ட அனைவரும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நிராகரிக்கப்பட வேண்டும் எனவும், வடக்கு கிழக்கு மக்களின் அறுதிப் பெரும்பான்மை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு கிடைக்க வேண்டும் எனவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை நடத்திய வேளை, இவ்வாறு குறிப்பிட்டார்.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இம்முறை தேர்தலில் அமோக வெற்றி ஈட்டவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் எமது மக்கள் கைகோக்க வேண்டும்

## கிளிநொச்சி அமைப்பாளர் ஜெகதீஸ்வரன்

கிளிநொச்சி, நவ. 08

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, பாரிய மாற்றத்தையும் வெற்றியையும் எதிர்பார்த்து நிற்கின்ற வேளையில், மக்களும் கைகோர்க்க வேண்டும் எனவும், இந்த பாராளுமன்றத் தேர்தல், திருப்புமுனையாக அமையும் எனவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளரும், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான தங்கவேல் ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடந்த



ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# தமிழ் தேசியத்துக்கு அர்த்தம் தெரியாதவர் சாணக்கியன்!

## சாடுகிறார் பிள்ளையான்

அம்பாறை, நவ. 08

நான் ஒரு முன்னாள் போராளி. விடுதலைப்புலிகள் அமைப்பில் துப்பாக்கி தூக்கிய ஒரு நபர் என்று எல்லோருக்கும் தெரியும். துப்பாக்கி தூக்குவது என்பது ஒயில் போட்டுவிட்டு துப்பாக்கி சாத்தி வைப்பது அல்ல. துப்பாக்கி என்றால் சுடும். எவரை சுடுவது என்பது ஒரு தர்மம். இவ்வாறான துப்பாக்கிகளை எமக்கு யார் கொடுத்தார்கள் என்பது இவ்விடத்தில் முக்கியம்.யார் இவ்வாறான துப்பாக்கிகளை தூக்குவதற்கு எமக்கு சந்தர்ப்பத்தை உருவாக்கியவர்கள். இவ்வாறான விடயங்கள் எல்லாம் மறந்து போய் தமிழ் தேசியத்துக்கு அர்த்தம் தெரியாத சாணக்கியன் எல்லாம் வந்து எமது மக்களுக்கு தேசியத்தை கற்பிக்கின்ற சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து நாங்கள் வெட்கப்படுகின்றோம் என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி வேப்பையடி 15 ஆம் கிராமம் பகுதியில் நடந்த மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜேவிபி அரசுடன் இணைந்து அமைச்சரவையில் அங்கம் வைப்பது பற்றி சுமந்திரன் சாணக்கியனும் இன்று சொல்கிறார்கள். இவ்வாறான தடம் புரள்வு இவர்களுக்கு எவ்வாறு வந்தது. இந்த மக்களை அழித்த ஒரு கட்சி அது. இவ்வாறு இருந்த அக்கட்சி எம்மைப் பார்த்து முன்னாள் ஆயுதக் குழுக்கள் என அவர்கள் கூறுகின்றார்கள். அமைச்சரவையில் ஆயுதக் குழுவை சேர்க்க மாட்டார்களாம் சேர்க்கவும் விடமாட்டார்களாம்.நான் முன்பே கூறியிருக்கின்றேன், அரசியலில் நிரந்தரம் ஒன்றுமில்லை. அதாவது நண்பனும் இல்லை எதிரியும் இல்லை.

எமது அன்பு மக்களே இவர்கள் காலத்துக்கு காலம் தேவைக் கேற்றால் போல் பல்வேறு புரளிகளை எழுப்புவார்கள்.

இது தவிர பிள்ளையானுக்கும் ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கும் சம்பந்தமாம். சாணக்கியன் சொல்கின்றார். ஒரு இஸ்லாமிய மகன் சொல்லியிருந்தால் பரவாயில்லை.

இந்த தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வெற்றி என்பது கிழக்கு தமிழர்களின் வெற்றியாகும்-என்றார். (அ)

# தமிழ் தேசியத்துக்காக வாக்கு கேட்பவர்கள் ஏன் துண்டுகளாக பிரிந்து நிற்கவேண்டும்?

## அங்கஜன் இராமநாதன் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 08

தமிழ் தேசியத்துக்காக வாக்களியுங்கள் என்பவர்கள் ஏன் பல துண்டுகளாக பிரிந்து நிற்க வேண்டும்? என ஜனநாயக தேசிய கூட்டணியின் யாழ். மாவட்ட பிரதான வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ் தேசியத்துக்காக வாக்களியுங்கள் என்பவர்கள் ஏன் பல துண்டுகளாக பிரிந்து நிற்க வேண்டும்? தலைவரையே ஏமாற்றிய இவர்களா தமிழ்த் தேசியத்தை காப்பாற்றுவார்கள்? எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாவற்குழியில் இடம்பெற்ற



மக்கள் சந்திப்பில் இவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

# சமஷ்டி ஊடாகவே தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்!

## ஐ. தே. க வேட்பாளர் டேவிட் நவரட்ணராஜ்

யாழ்ப்பாணம், நவ. 08

"சமஷ்டி முறையான தீர்வே எமது தீர்வாகும். அதனூடாகவே தமிழர்களின் பிரச்னைகளை தீர்க்க முடியும்" என யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் டேவிட் நவரட்ணராஜ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் மாவட்ட தேர்தல் காரியாலயம் பலாலி வீதி கந்தர்மட பகுதியில் நேற்று முன் தினம்



திறந்து வைக்கப்பட்டது. முதன்மை வேட்பாளர் டேவிட் நவரட்ணராஜ் மற்றும் சக வேட்பாளர்களால் தேர்தல் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

காரியாலயத்தை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட வேட்பாளர் டேவிட் நவரட்ணராஜ், இரண்டு வருடங்களில் நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றியவர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கரமசிங்க என தெரிவித்தார். (அ)

# இணைந்திருந்த வடக்கு, கிழக்கை பிரித்தது தேசிய மக்கள் சக்தியே!

## வேந்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 08

முன்னாள் போராளிகளுக்கு அங்கீகாரம் தேவை என்பதற்காகவே தாம் தேர்தலில் போட்டியிடுவதாக ஜனாநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடும் ஜனாநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தெரிவித்தார்.

இணைந்திருந்த வடக்கு-கிழக்கை பிரித்தவர்கள் இந்த தேசிய மக்கள் சக்தியினரே என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தென்னிலங்கையில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்தவர்கள் சிங்கள மக்கள். ஆனால் அவர்கள் எமது பகுதிக்கு வந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தப் போவது என்பது ஒரு வேடிக்கையான விடயம்.

அதேபோன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை கூட இல்லாமல் செய்தவர்களும் இவ் தேசிய மக்கள் சக்தியினர்.

அதேபோன்று ஐ.நா.சபையில் கொண்டுவரப்பட்ட யுத்தக் குற்ற பிரேரணை தொடர்பில் இலங்கையில் யுத்த குற்றம் நடைபெறவில்லை என்றும் தாம் எந்த சர்வதேச நீதிமன்றத்திலும் விசாரணைக்கு போகத் தேவை இல்லை என்று சொன்னவர்களும் இவர்கள்தான்.

ஆகவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது எங்கள் தலையில் மண் அள்ளி போடும் செயல். நாங்கள் ஜனநாயக ரீதியாக பல கட்சிகளின் கூட்டாக இணைந்து இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். ஆகவே எங்களுக்கு வாக்களியுங்கள்-என்றார். (அ)

# தமிழ் தேசிய அடையாளமான சங்கு பாராளுமன்றம் செல்ல வேண்டும்!

## சித்தார்த்தன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 08

"தமிழ் தேசிய இனத்தின் அடையாளமான சங்கு, பாராளுமன்றம் செல்ல வேண்டியது கட்டாயம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவர்கள் பாராளுமன்றத்திற்கு செல்ல வேண்டியது கட்டாயம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்தன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பிரசாரக் கூட்டம் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் - தாவடியில் நடைபெற்



றது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களான தர்மலிங்கம் சித்தார்தன், பாலச்சந்திரன் கஜதீபன் ஆகியோரை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய தர்மலிங்கம் சித்தார்தன் இவ்வாறு தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்குறுதிகளை அநுரவால் இன்னும் நிறைவேற்றமுடியவில்லை!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 08

**தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நிறைவேற்ற முடியாது போயுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



மத்திய கொழும்பு பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நிறைவேற்ற முடியாது போயுள்ளது. வரிகளை நீக்குவதற்கு தயாராகவுள்ளதாக ஜனாதிபதி கூறினார் ஆனால் அவரால் நிறைவேற்ற முடியாதுபோயுள்ளது.

இரண்டு முறை, அவர் நாணய நிதியத்துடன் கலந்துரையாடினார், ஆனாலும் அந்த கலந்துரையாடல்கள் மூலம் நாட்டுக்கு சாதகமான முன்னேற்றம் எட்டப்படவில்லை. வரிகளை குறைக்கும் நிபந்தனையை சர்வதேச நாணயம் நிதியம் மறுத்துள்ளது.

எனவேதான் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பலத்தை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களும் மக்களின் தலையில் சுமத்தியுள்ள வரிச்சுமையிலிருந்து விடிவைப் பெற்றுத் தருவோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் புதிய உடன்படிக்கையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தி பல உடன்பாடுகளை எட்டியுள்ளது. தற்போதல்ல எதிர்க்கட்சியில் இருக்கும் போதே தாம் இவ்வாறான உடன்பாடுகளை எட்டியுள்ளது-என்றார். (அ)

# ராஜபக்ஷக்களின் அரசியல் பயணத்துக்கு முடிவுகட்ட புலம்பெயர் புலி ஆதரவாளர் சதி!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 08

"ராஜபக்ஷக்களின் அரசியல் பயணத்துக்கு முடிவுகட்டுவதற்கு புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் 2009 இல் இருந்து முயற்சித்துவருகின்றனர். அறகலயவிலும் அவர்களின் பங்களிப்பு இருந்தது." என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015 பொதுத்தேர்தலில் போட்டியிடும் நிலைப்பாட்டில் மகிந்த ராஜபக்ஷ இருக்கவில்லை. எனினும், கட்சியின் அழைப்பின் பிரகாரமே 2015 தேர்தலில் அவர் போட்டியிட்டார். இம்முறை போட்டியிடமாட்டார் என்ற முடிவிலேயே மகிந்த ராஜபக்ஷ ஆரம்பம் முதலே இருந்தார். அந்தவகையிலேயே அவர் ஒதுங்கினார்.

இம்முறை தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் களமிறங்கும் முடிவில் நான் இருந்தேன். கட்சி விடுத்த கோரிக்கையால், நாடு முழுவதும் கட்சி உறுப்பினர்களுக்காக பிரசாரம் செய்ய வேண்டியுள்ளதால் பெயர் தேசியப் பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷாக்களின் அரசியல் பயணத்துக்கு முடிவுகட்டுவதற்கு 2009 ஆம் ஆண்டிலிருந்தே உலகில் இருந்து குழுவொன்று முயற்சித்துவருகின்றது. ராஜபக்ஷாக்களின் அரசியலை வீழ்த்துவதற்கு புலி டயஸ்போராக்கள் முயற்சித்து வருகின்றனர்.

அறகலயவிலும் அவர்களின் பங்களிப்பு இருந்துள்ளது. அறகலயவில் உண்மையான போராட்டக்காரர்களும் இருந்தனர். ஆனால் ஓர் அங்கமாக சூழ்ச்சி திட்டமும் இருந்தது. டயஸ்போராக்களில் சிலர் இன்று அரசியலுக்கும் வந்துள்ளனர். தற்போதைய அரசாங்கத்துக்கு டயஸ்போராக்களின் ஆதரவு வழங்கினர். ராஜபக்சக்களை வீழ்த்துவதற்காகவே இந்த ஆதரவு வழங்கப்பட்டது-என்றார்.

# அரசியல் அனுபவம் வாய்ந்தோரே பாராளுமன்றம் செல்லவேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 08

அனுபவம் வாய்ந்தோரே பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டபோது பொருளாதாரம் பெரும் அழிவை சந்தித்திருந்தது. அவ்வேளையில் பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அப்போது பாராளுமன்றத்தில் அனுபவம் வாய்ந்தோர் இருந்ததால் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அதனாலேயே நாட்டை மீட்டெடுக்க முடிந்தது. எனினும் பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் திருடர்கள் என மக்கள் விடுதலை முன்னணியினர் கூறி வருகின்றனர். அவ்வாறாயின் அவர்கள் அதற்கு ஏதிராக ஏன் குரல் கொடுக்கவில்லை.

சுமார் 400 கோப்புகள் இருப்பதாகக் கூறினார்கள். ஏன் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை?

பாராளுமன்றத்துக்கு தமக்கு விருப்பமான உறுப்பினரை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு. எனினும் கட்சிக்கு வாக்களிக்குமாறும் உறுப்பினர்கள் யார் என்பதை ரில்வின் சில்வா தீர்மானிப்பார் என்றும் அவர்கள் சார்பில் கூறப்படுகிறது.

இது மக்களின் ஜனநாயக உரிமை மீறலாகும். இதுகுறித்து மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும்-என்றார். (அ)

# 10 பேருடன் பலமான அணியாக பாராளுமன்றத்துக்கு செல்வோம்!

## மனோ கணேசன் கூறுகிறார்



கொழும்பு, நவ. 08

பத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எமது அணி, எதிர்வரும் பத்தாம் பாராளுமன்றத்தில் ஒரு அழுத்த அணியாக இடம் பெற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் முற்போக்கு கூட்டணி, பதுளை, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, கம்பஹா ஆகிய ஏழு மாவட்டங்களில் பத்து வேட்பாளர்களை களமிறக்கி உள்ளது. இந்த பத்து வேட்பாளர்களும் வெல்லவேண்டும்.

எம்மை நாமே பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இந்நாடு இன்று ஒரு வரலாற்று திருப்பு முனையில் நிற்கிறது. இந்த வரலாற்று சூழலில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நாம் நமது மக்களை பிரதிநிதித்துவம் செய்யவேண்டும். வரலாறு தந்திருக்கும் வாய்ப்பை நாம் தவறவிடக்கூடாது.

ஏதோ வானத்தில் இருந்து இறங்கி வந்த கௌதம புத்தனை போல் பேசுகின்ற நபர்களை நான் என் அரசியல் வாழ்வில் பல முறை பார்த்து இருக்கிறேன். இப்போதும் பார்க்கிறேன். இந்த பசப்பு வார்த்தைகளில் நமது மக்கள் ஏமாந்து விட கூடாது. உண்மையில் நாம் இன்று சந்திக்கும் பல்வேறு துன்பங்களுக்கு இன்று தேனொழுக பேசும் இவர்கள்தான் முதல் காரணம். ஆகவே, இவர்கள் எப்படி எம்மை பிரதிநிதித்துவம் செய்ய முடியும்? எம்மை நாம்தான் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

ஆகவே ஏழு மாவட்டங்களில் போட்டி இடும் எமது பத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்று, எதிர்வரும் பத்தாம் பாராளுமன்றத்தில் நாம் ஒரு அழுத்த அணியாக இடம் பெற வேண்டும். இதை மனதில் கொண்டு நமது மக்கள் வாக்களிக்க வேண்டும்.

எம் தேவைகள் பற்றி, எம் இருப்பு பற்றி, எம் அபிலாசைகள் பற்றி, நாம்தான் பேச வேண்டும். குரல் கொடுக்க வேண்டும். இன்று தேனொழுக பேசும் வேறு எவரும் எம்மை பற்றி பேச மாட்டார்கள். உண்மையில் நாம் இன்று சந்திக்கும் பல்வேறு துன்பங்களுக்கு இன்று தேனொழுக பேசும் இவர்கள்தான் முதல் காரணம்-என்றார். (அ)

# வேலைநிறுத்தங்களை செய்தவர்கள் இப்போது தேசிய மக்கள் சக்தியுடன்!

கொழும்பு, நவ. 08

கடந்த காலங்களில் வேலை நிறுத்தங்களை ஏற்பாடு செய்தவர்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதால் தற்போது நாட்டில் வேலை நிறுத்தங்கள் இல்லை என முன்னாள் அமைச்சரும் காலி மாவட்ட தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருமான மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை. போராட்டங்களையும் தொழிலாளர் அமைதியின்மையையும் ஏற்பாடு செய்தவர்கள் இன்று தேசிய மக்கள் சக்தியின் கீழ் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இந்நாட்டின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் எதிர்த்தவர்கள் இன்று ஆளும் கட்சியில் இருக்கின்றார்கள்.

பாஸ்போர்ட் பிரச்சனைக்கு இதுவரை அரசு தீர்வு வழங்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்துள்ளார். எதிர்காலத்தில் ஏற்படும் பொருளாதார அதிர்ச்சிகளை தேசிய மக்கள் சக்தி எவ்வாறு கையாளும்?

காஸ் சிலிண்டர் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த அணியை கொண்டுள்ளது. திறமையும் அனுபவமும் உள்ளவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்-என்றார். (அ)

# ஜனநாயக தேசியக் கூட்டணி மூன்றாவது சக்தியாக மாற்றம்

கொழும்பு, நவ. 08

நாட்டின் மூன்றாவது அரசியல் சக்தியாக ஜனநாயக தேசிய கூட்டணி உருவாகியுள்ளதாக நடிகை தமிதா அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் பொரளை தொகுதிக்கான தேர்தல் அலுவலகத்தை திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பிரதான கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அவ்வாறு பிரதான கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருசிலர் தனி மனிதர்கள் மீது கோபமடைந்துள்ளார்கள்.

அதனைப் பற்றி நாம் கரிசனை கொள்ளத் தேவையில்லை. ஜனநாயக தேசிய கூட்டணியின் வேட்பாளர்கள் சுயநலமின்றி மக்களுக்காக சேவையாற்றுபவர்கள். ஆதலால் அவ்வாறானவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட வேண்டும்-என்றார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளராக பெயரிடப்பட்டு அதிலிருந்து நீக்கப்பட்ட நிலையில் நடிகை தமிதா அபேரத்ன, ஜனநாயக தேசிய கூட்டணியின் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிய கூட்டுறவுத்துறை பங்களிப்பு மிகவும் அவசியமானது

## கிழக்கு கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு





கல்முனை, நவ. 08

**கிராமிய மக்களின் வறுமை நிலையை போக்குவதற்கு கூட்டுறவுத்துறையின் பங்களிப்பு மிகவும் அவசியம்.**

**கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன- இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. தனேஸ்வரன் தெரிவித்தார்.**

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் ஆராயும் மாநாடு கல்முனை கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர் க. வேல்வேந்தன் தலைமையில் கல் முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவல கத்தில் புதன்கிழமை நடைபெற் றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"அடுத்த ஐந்து வருடங்களில் கிராம மக்களின் வறுமையை இல்லாதொழித்து கிராமிய மக் களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக் கமாகும்.

இதனடிப்படையில் கூட்டு றவு அபிவிருத்தி ஆணையாள ராக நான் பதவியேற்றது முதல் கிழக்கு மாகாண கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நேரடி கள தரிசிப்பு களை மேற்கொண்டு சங்கங்க ளின் நடவடிக்கைகளைக் கண் காணித்து, அவற்றின் அபிவி ருத்தி தொடர்பில் கலந்துரை யாடி வருகின்றேன்"- என்றார்.

இதில் பலநோக்கு கூட்டுற வுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (எ)

# கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலத்தை உடனடியாக நிர்மாணிக்க நடவடிக்கை

## மக்களின் நிலை அறிந்து ஆளுநர் கவலை

கிண்ணியா, நவ. 08

கிண்ணியா மக்களின் தேவை கருதி கிண்ணியா - குறிஞ்சாக் கேணி பாலம் உடனடியாக நிர் மாணம் செய்யப்பட வேண்டி யது அத்தியாவசியம். எனவே, ஜனாதிபதியிடம் பேசி, இதற் கான நிதியை பெற்றுக் கொள் வதற்கு உரிய நடவடிக்கை எடுப் பேன் என்று கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்தார்.

திருகோணமலை, கிண்ணி யாவுக்கு நேற்று முன்தினம் பய ணம் மேற்கொண்டு குறிஞ்சாக் கேணி பாலத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட படகு விபத்து அனர்த் தத்தால் 8 பேரை பலி கொடுத் தும், இன்று வரை இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படாமல் இருப் பது எனக்கு கவலை அளிக்கிறது.

இந்தப் பாலம் உடனடியாக நிர்மாணம் செய்யப்பட வேண் டும்.

அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஜனாதிபதியுடன் பேசி தேவையான நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவ டிக்கை எடுப்பேன் என்பதை இந்த மக்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்"- என்றார். (எ)



# அம்பாறையில் கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கல்

சாய்ந்தமருது, நவ. 08

அம்பாறை மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கு அவர்களது கலையின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவையைக் கௌரவப்படுத் தும் முகமாக அரசால் அங்கீகா ரமளிக்கப்பட்டு வழங்கப்படும் "தேசிய கலைஞர் அடையாள அட்டை" வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயல கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஐந்து பிர தேச செயலகங்க பிரிவுகளிலி ருந்து 26 பேர் கலைஞர் அடை யாள அட்டைக்காக தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு தேசிய ரீதியில் கலைஞர் அடை யாள அட்டை வழங்கி வைக்கப் பட்டது. (எ)







# பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உற்பத்தி பொருட்கள் விற்பனை, கண்காட்சி

மருதமுனை, நவ. 08

பெண்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையல் பயிற்சி, உற்பத்திப் பொருட்களின் விற்பனை கண் காட்சி என்பன நேற்று நடை பெற்றன.

டயகோனியா அனுசரணை யுடன் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி நடத்திவரும் இத் தையல் பயிற் சியானது ஆசிரியை திருமதி ஜெமினா பர்வின் நெறிப்படுத் தலில் மருதமுனை பகுதியிலுள்ள அலுவலகத்தில் சிறப்பாக நடை பெற்றது.

இதன்போது சந்தைப் படுத் தலும் அதற்கான யுக்தி முறைக ளும் தொடர்பில் விழிப்புணர்வு கருத்தரங்கை அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி ஹபீலா அலீஸ் தலைமையில் வளவாளராக நிந்தவூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிஸ் வானுல் ஜென்னா மேற்கொண் டார்.

குறித்த கண்காட்சியில் யுவ திகளால் பயிற்சிக் காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பாட சாலை சீருடை வகைகள் ஆடை அணிகலன்கள் சாரிகள் சல்வார் கள், நவநாகரிக உடைகள் என பல்வேறு பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

மேலும், பெண் தலைமைத் துவ மற்றும் பாடசாலை கல் வியை இடைநிறுத்திய யுவதி கள் இத்திட்டத்தில் இணைக் கப்பட்டுள்ளதுடன் அவர்களது வருமானத்தை மேம்படுத்தி வாழ் வாதாரத்தை முன்னெடுப்பதற் காக இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இந்தக் கண்காட்சியில் உற்பத்திப் பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கான வழி வகைகளை இலகுவாக மேற் கொள்ள பல்வேறு விளக்கவுரை கள் வழங்கப்பட்டன. (எ)

# அரசியல் தலையீடுகளின்றி சுதந்திரமாக செயல்படலாம்

## கிழக்கு ஆளுநர் உறுதியளிப்பு

திருகோணமலை, நவ. 08

புதிய செயலாளர்கள் சுதந்திர மாக செயல்படுவதற்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும் என்றும் அரசி யல் தலையீடுகள் இருக்காது என்றும் கிழக்கு மாகாண ஆளு நர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் பணியகங்கள் மற்றும் அதிகார சபைகளுக்கான தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் களை நியமித்து அவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கிவைத்தார். இதன்போது, நிறுவனங்களின் புதிய தலைவர் களுக்கும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஆளுநர், சுதந்திரமாக செயல்படுவதற் கான அனைத்து அதிகாரங்க ளும் வழங்கப்படும் என்றும் அரசியல் தலையீடுகள் இன்றி தமது சேவைகளை ஆற்றக்கூ டிய சூழலை உருவாக்குவதா கவும் கூறினார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல். பி. மதநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண் டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் நாணய மதிப்பு திடீரென பெரும் வீழ்ச்சி!

தெஹ்ரான், நவ. 08

**அமெரிக்காவில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். அவர் ஜனாதிபதி பதவியை மீண்டும் கைப்பற்றியதால், ஈரானின் நாணய மதிப்பு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நேற்று கடுமையாக வீழ்ச்சியடைந்தது. டொலருக்கு நிகரான ரியால் 703,000 ஆக சரிந்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.**

2015ஆம் ஆண்டில், உலக வல்லரசு நாடுகளுடன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் செய்த போது, ஈரானின் ரியால் மதிப்பு ஓரளவுக்கு சிறந்த நிலையில் இருந்தது. ஒரு டொலருக்கு 32,000 ரியால் என்ற அளவில் மதிப்பு இருந்தது. கடந்த ஜுலை மாதம் ஈரானின் புதிய ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் பதவியேற்ற போது, டொலருக்கு நிகரான ரியால் 584,000 என்ற அளவில் இருந்தது.

இப்போது ஈரான் நாணய மதிப்பு கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பது, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றத்துக்கு மத்தியில், ஈரான் எதிர்கொள்ளவிருக்கும் புதிய சவால்களை காட்டுகிறது.

ஈரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் 1979இல் கையகப்படுத்தப்பட்டு, அங்கிருந்தவர்கள் 444 நாட்கள் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நடந்து 45 ஆண்டுகள் கடந்த பின்பும் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றங்கள் நீடிக்கின்றன.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக 2018இல் அப்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார். அதன்பின்னர் இரு நாடுகளுக்கிடையிலான விரிசல் மேலும் அதிகரித்தது.

இதுதவிர அணுசக்தித் திட்டத்துக்காக ஈரான் சர்வதேச தடைகளையும் எதிர்கொள்கிறது. இதனால் பல ஆண்டுகளாக நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதி பதவியை கைப்பற்றியதால் அதன் தாக்கம் ஈரான் சந்தையில் எதிரொலித்து நாணய மதிப்பை பாதித்துள்ளது.

# தேர்தல் முடிவுகளை நாம் ஏற்க வேண்டும்

## கமலா ஹாரிஸ் தெரிவிப்பு



வாஷிங்டன், நவ. 08

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை நாம் ஏற்க வேண்டும் என்று ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும், தற்போதைய துணை ஜனாதிபதியுமான கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

"இந்தத் தேர்தல் முடிவுகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்புடன் பேசினேன். அவரது வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தேன். அமைதியான முறையில் அதிகார மாற்றம் நிகழ்வதற்கு அவருக்கும் அவரது அணிக்கும் உதவுவோம் என்று கூறினேன்.

நீங்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கை, நம் நாட்டின் மீது வைத்துள்ள அன்பு, உறுதி ஆகியவற்றை எண்ணி இன்று என் இதயம் நிரம்பியுள்ளது. இந்தத் தேர்தலின் முடிவு நாம் விரும்பியதோ அல்லது நாம் போராடியதோ அல்ல. ஆனால், நான் சொல்வதைக் கேளுங்கள், அமெரிக்காவின் வாக்குறுதியின் ஒளி எப்போதும் பிரகாசமாக எரியும்"- என்றார். (எ)

# அமெரிக்காவின் போக்கில் பெரும் மாற்றம் இருக்காது

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

கான்பெரா, நவ. 08

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவால் அதன் கொள்கை ரீதியிலான போக்கில் பெரிய மாற்றம் இருக்கப்போவதில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவின் கான்பெராவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஜெய்சங்கர், "அமெரிக்க கொள்கையின் நீண்டகால போக்கு என்று நான் கூறிவரும் விடயத்தை அங்கு நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மாற்றியமைக்கும் என்று நான் நம்பவில்லை. அநேகமாக, முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவில் இருந்து தொடங்கி அமெரிக்கா அதன் சர்வதேச கடமைகள் குறித்து மிகவும் எச்சரிக்கையுடன் உள்ளது. உதாரணமாக அமெரிக்கா தனது துருப்புகளை (இராணுவம்) நிலைநிறுத்துவதில் தயக்கம் காட்டுகிறது.

ஜனாதிபதி ஜோ பைடன் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கத் துருப்புகளைத் திரும்பப் பெற்றார். டொனால்ட் ட்ரம்ப் இந்த விடயத்தில் இன்னும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருக்கலாம். அமெரிக்காவின் முந்தைய ஆதிக்கம் மற்றும் தாராளவாத மனப்பான்மை இனியும் தொடராத ஓர் உலகத்துக்கு நாம் தயாராக வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்றார். (எ)

# இந்திய பிரதமர் மோடி உண்மையான நண்பர்

## டொனால்ட் ட்ரம்ப் கூறுகிறார்

வாஷிங்டன், நவ. 08

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும், இந்தியாவையும் உண்மையான ஒரு நண்பராக கருதுகிறேன் என்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த உலகமும் பிரதமர் மோடியை விரும்புகிறது. இந்தியா ஒரு பிரமிக்க வைக்கும் நாடு. மோடி ஒரு உன்னதம் வாய்ந்த நபர். மோடியையும், இந்தியாவையும் உண்மையான ஒரு நண்பராக கருதுகிறேன்.

வெற்றி பெற்ற பின்பு முதன்முதலாக நான் பேசிய உலகத் தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர் என்று ட்ரம்ப் கூறினார். (எ)



# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் லெபனானில் 30 பேர் உயிரிழப்பு

பெரூட், நவ. 08

லெபனானின் பார்ஜா நகரில் இஸ்ரேல் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் அங்கு இருந்த ஒரு அடுக்குமாடி கட்டடம் இடிந்து விழுந்தது. இந்த இடிபாடுகளிலிருந்து 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இடிபாடுகளின் அடியில் இன்னும் எத்தனை பேர் சிக்கியிருக்கிறார்கள் என்பதும் எத்தனை பேர் உயிர் பிழைத்தனர் என்பதும் தெளிவாக தெரியவில்லை என்று சிவில் பாதுகாப்பு அதிகாரி முஸ்தபா தனாஜ் தெரிவித்தார். (எ)

# பாகிஸ்தானில் துப்பாக்கி சூடு 7 பேர் மரணம்

கராச்சி, நவ. 08

பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் இரு வேறு சம்பவங்களில் 7 பேர் உயிரிழந்தனர். பெண் உட்பட இருவர் படுகாயமடைந்தனர். பத்கேலா நகரில் பகதூராபாத் பகுதியில் இரு குழுக்கள் இடையே நடந்த மோதலில் இரு தரப்பினரும் துப்பாக்கிகளால் ஒருவரையொருவர் சுட்டு கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஐவர் பலியாகினர். ஒருவர் காயமடைந்தார். இதேபோன்று, குர்ரம் பழங்குடியின மாவட்டத்தில் பேருந்தை நோக்கி மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் இருவர் உயிரிழந்தனர். பெண் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. (எ)

# இருதரப்பு உறவைப் பலப்படுத்த அமெரிக்காவுடன் பேச்சுக்கு தயார்

## ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர்

மொஸ்கோ, நவ. 08

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வெற்றி பெற்றுள்ளதையடுத்து இருதரப்பு உறவைப் பலப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைக்கு கதவுகள் திறந்துள்ளதாக ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், "அமெரிக்காவுடனான உறவு மிகுந்த தொய்வு நிலையில் இருந்தாலும் அதனுடன் சுமுக உறவை மேற்கொள்வதற்கான பேச்சுகளை நடத்த ரஷ்யா தயாராகவே உள்ளது. ஆனால், அதற்கு முன்பாக அனைத்தையும் கவனமாக கண்காணித்து ஆராய்வோம். ஜனவரியில் ட்ரம்ப் ஜனாதிபதியாக வெள்ளை மாளிகைக்கு திரும்பும் போது என்ன நிகழ்கிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்புக்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் வாழ்த்து தெரிவிக்க விரும்புகிறாரா என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என்றும் அவர் கூறினார்.

தற்போது வரை அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையிலான உறவு வரலாறு காணாத அளவுக்கு மோசமானதாகவே உள்ளது. (எ)

# "தமிழ்த்தாய் வாழ்த்தை புறக்கணிப்பது நியாயமா?"

## முன்னாள் ஆளுநர் தமிழிசை கேள்வி



சென்னை, நவ. 08

தமிழ்த்தாய் வாழ்த்தை புறக்கணிப்பது நியாயமா என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு, முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அரசு விழாக்களில் தவறாமல் பாடப்படும் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலில் பாடியவர்களின் குறையில் ஆளுநர் பொறுப்பேற்க வேண்டுமென்று சொன்னவர்கள். உங்கள் அரசு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடாமலே குறை வைத்திருக்கிறீர்களே, இந்தக் குறைக்கு நீங்கள் தானே பொறுப்பேற்க வேண்டும்.

குறை இல்லாமல் தமிழ்த்தாய் வாழ்த்து பாட வேண்டுமே தவிர. தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதையே தவிர்ப்பது நியாயமா? பாடியதில் குறை கண்ட நீங்கள் பாடாமல் விடுவதே குறை என்று எண்ணவில்லையா? குறையோடு பாடுவது அநீதி, அதற்காக பாடாமல் இருப்பது நீதியா?"என்று தமிழிசை கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி

## ஒருநாள் தொடரை இழந்தது இங்கிலாந்து

பார்படாஸ், நவ. 08

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒரு நாள் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற மேற்கு இந்திய தீவுகள் அணி தொடரை கைப்பற்றியது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தற்போது மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் இரு ஒருநாள் போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றன.

இந்த நிலையில், ஒருநாள் தொடர் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் 3ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கு இந்திய தீவுகள் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. இதையடுத்து இங்கிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர்களாக பில் சால்ட் மற்றும் வில் ஜேக்ஸ் ஆகியோர் களமிறங்கினர்,

இதில் பில் சால்ட் ஒருபுறம் நிலைத்து நின்று ஆட மறுபுறம் விக்கெட்கள் விழுந்த வண்ணம் இருந்தன. இதில் ஜேக்ஸ் 5, ஜோர்டன் காக்ஸ் 1, லிவிங்ஸ்டன் 6, சாம் கரன் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து மவுஸ்லி, பில் சால்டுடன் ஜோடி சேர்ந்தார். இந்த இணை நிதானமாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தது. இதில் இருவரும் அரைச்சதம் அடித்தனர்.

இந்த நிலையில் சால்ட் 74 ஓட்டங்களிலும், மவுஸ்லி 57 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து ஓவர்டென் மற்றும் ஆர்ச்சர் களமிறங்கினர். இறுதியில் இங்கிலாந்து 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 263 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக மத்தியூ போர்ட் 3 விக்கெட்



கள் வீழ்த்தினார். தொடர்ந்து 264 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கு இந்திய தீவுகள் அணி விளையாடியது .

தொடக்கத்தில் லூவிஸ் 19 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார் . தொடர்ந்து பிரண்டன் கிங், கீசி கார்டி இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர், இங்கிலாந்து அணியின் பந்துவீச்சை இருவரும் துவம்சம் செய்தனர். தொடர்ந்து அதிரடியாக விளையாடி பிரண்டன் கிங் , கீசி கார்டி இருவரும் சதமடித்து அசத்தினர். பிரண்டன் கிங் 102 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார் மறுபுறம் கீசி கார்டி நிலைத்து நின்று விளையாடினார். இறுதியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 43 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 267 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் அந்த அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியால் ஒருநாள் தொடரை 2 - 1 என மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது.

(எ)





## “ரோஹித் ஓய்வு பெறுவது நல்லது”

புதுடில்லி, நவ. 08

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரோஹித் சர்மா தோல்வியடைந்தால் அவர் ஓய்வு பெறுவது நல்லது, அவருக்கும் வயதாகி விட்டது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணமாச்சாரி சிறீகாந்த் தெரிவித்தார்.

“முன்னோக்கிச் சிந்திக்க வேண்டும். ரோஹித் சர்மா நன்றாக ஆடவில்லை எனில் அவர் ஓய்வு பெறுவது நல்லது. அவர் ஒரு நாள் கிரிக்கெட்டில் விளையாடுவார். ரோஹித் சர்மாவுக்கு வயதாகி வருகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஆனால் தான் தொடர் முழுதும் மோசமாக ஆடியதாகவும் மோசமாக தலைமைத்துவம் செய்ததாகவும் ரோஹித் சர்மாவே ஒப்புக்கொண்டதற்காக அவருக்கு எனது தலைசாய்த்து மரியாதை செய்கிறேன். இப்படி ஒப்புக்கொள்ளுதல்தான் ஒரு வீரர் தன்னுடைய பழைய நிலைக்குத் திரும்புவதன் முதல் படி.

நம் தவறுகளை ஒப்புக் கொள்வது முக்கியமானது. மனிதர்களுக்கு மிகவும் அவசியமான ஒரு குணம் ஆகும் அது. ரோஹித் சர்மா வெளிப்படையாக தன் குறைகளை ஒப்புக் கொண்டுள்ளார். இது அவர் தன்னை மீட்டெடுப்பதற்கான பாதையில் செல்லப் போகிறார் என்று அர்த்தம். இது என்னுடைய கருத்து”- என்றார்.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டித் தொடரில் இந்தியா படுதோல்வி அடைந்தது. இதன் பின்னர் அந்த அணி மீதும் அணித் தலைவர் ரோஹித் மீதும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

## ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை ரிஷப் பண்ட் முன்னேற்றம்



டுபாய், நவ. 08

டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில் இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் துடுப்பாட்ட வீரரான ரிஷப் பண்ட், 5 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஓர் இடம் பின்தங்கி 4ஆவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் முதலிடத்தில் தொடர்கிறார். நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் 2ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் ஹாரி புரூக் 3ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் 5ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் ஷுப்மன் கில் 4 இடங்கள் முன்னேறி 16ஆவது இடத்தை பிடித்துள்ளார். (எ)

# அல்லா அபார பந்துவீச்சு ஆப்கானிஸ்தான் வெற்றி

ஷார்ஜா, நவ. 08

பங்களாதேஷ் அணியுடனான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணியின் பந்து வீச்சாளர் அல்லா கசன்பரின் அற்புத செயல்பாடு வெற்றிக்கு துணையாக அமைந்தது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் முதல் போட்டி ஷார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 49. 4 ஓவர்களில் 235 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

71 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து ஆப்கானிஸ்தான் தடுமாறியது. இருப்பினும் முகமது நபி மற்றும் அணித் தலைவர் ஹஷ்மதுல்லா ஷாஹிதி ஆகியோர் இணைந்து 104 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்து அணியை சரிவிலிருந்து மீட்டனர். நபி 84 ஓட்டங்கள் மற்றும் ஹஷ்மதுல்லா ஷாஹிதி 52 ஓட்டங்கள் எடுத்தனர். பங்களாதேஷ் தரப்பில் தஸ்கின் அகமது மற்றும் முஸ்தபிசூர் தலா 4 விக்கெட்களை வீழ்த்தினர்.

236 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பங்களாதேஷ் அணி விரட்டியது. 25. 5 ஓவர்களில் 120 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்களை மட்டுமே இழந்து வலுவான நிலையில் இருந்தது பங்களாதேஷ். இருப்பினும் அதன் பின்னர் அந்த அணியின் விக்கெட்கள் மளமளவென சரிந்தன கூடுதலாக 23 ஓட்டங்கள்



எடுப்பதற்குள் 7 விக்கெட்களை அந்த அணி இழந்தது. 34. 3 ஓவர்களில் 143 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து தோல்வியடைந்தது. இதன் மூலம் 92 ஓட்டங்களில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

சுழற்பந்து வீச்சாளரான அல்லா கசன்பர் 6. 3 ஓவர்களில் 26 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். அவர் 25 பந்துகளை ஓட்டம் கொடுக்காமல் வீசியிருந்தார். ஆட்ட நாயகன் விருதையும் அவர் வென்றார். இந்தத் தொடரின் அடுத்த போட்டி நாளை 9ஆம் திகதி நடைபெறும். (எ)

## ஐ. பி. எல். மெகாஏலத்தில் அண்டர்சனும் வருகிறார்!

லண்டன், நவ. 08

சவுதி அரேபியாவில் நவம்பர் 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் ஐ. பி. எல். மெகா ஏலம் நடைபெறுகிறது. நவம்பர் 4ஆம் திகதியுடன் முடிந்த வீரர்கள் பதிவு விவரங்களின் படி 1, 574 வீரர்கள் தங்கள் பெயர்களை ஏலத்துக்காக பதிவு செய்துள்ளனர். இதில் ஆச்சரியம் என்னவெனில் 2014இல் கடைசியாக ரி - 20 போட்டியில் விளையாடிய இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் ஐ. பி. எல். ஏலத்தில் தன் பெயரையும் பதிவு செய்துள்ளார். இவர் இந்த ஆண்டு தான் சர்வதேச டெஸ்ட் போட்டிகளிலிருந்து 42 வயதில் ஓய்வு பெற்றிருந்தார்.

இதேவேளை, பென் ஸ்டோக்ஸ் ஏலத்திலிருந்து விலகியுள்ளார். தற்போதைய நிலவரப்படி 10 அணிகளும் மொத்தம் 46 வீரர்களை தக்க வைத்துள்ளன. இதற்கான மொத்த செலவு 558. 5 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுடன்...

வடமாராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீனவர் பிரச்சினை தீராத பிரச்சனையாக உள்ளது. எங்களுடைய கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படு கின்றபோது அது தொடர்பில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும்போது இந்தியா எங்களுடன் வந்து பேசக்கூடும். அதேபோன்று தங்களது பூகோள நலன்கள் சார்ந்த விடயங்களில் தங்கள் கருத்துகளை எங்களுடன் வந்து பகிர்ந்து கொள்வதில் எந்த தவறும் இல்லை. என்னைப் பொறுத்தவரை பூகோள விடயங்கள் தொடர்பில் எங்களுடன் பேசுவது நல்ல விடயம். யாரோடு பேசினாலும் பேசப்படுவதில் எந்தத் தவறும் இல்லை.

இந்தியாவின் நலன்கள் சம்பந்தப் பட்ட விடயத்தில் நாங்கள் ஒத்த கருத்தில் வருவதில் என்னைப் பொறுத்தவரை எந்த தவறும் இல்லை. அயல் நாடு என்ற வகையில்-வளர்ந்து வரும் வல்லரசு என்ற வகையில் இந்தியாவுக்கு தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடங்கள் நிச்சயமாக உண்டு. இந்தியாவுக்கு நாங்கள் தான் அயல் தேசம். சிங்கள தேசம் அல்ல. தமிழ்த் தேசம் தான் அயல் தேசம். அப்படி என்றால் தமிழ்த் தேசத்தை ஒரு பாதுகாப்பு கவசமாகத் தன்னும் பார்க்கும். அந்த தேவை அவர்களுக்கு இருக்கும். அந்த இடத்தில நாங்கள் அவர்களுடன் மனம் திறந்து கதைப்பதும் அவர்களுடைய தேவைகளை எங்களுடன் வந்து பகிர்ந்து கொள்வதிலும் ஒரு தவறும் இல்லை.

ஆனால் இந்தியாவின் நலன்களுக்காக எங்களுடைய நலன்களை விட்டு பாதிப்பு வரக்கூடிய வகையில் நாங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது. அந்த இடத்தில் இந்தியா கேட்பதில் தவறு இல்லாமல் இருக்கும். ஏனென்றால் தன்னுடைய நலன்கள் சார்ந்த விடயத்தில் அவர்கள் கேட்கத் தான் வேண்டும். ஆனால் அதற்கு நாங் கள் இணங்குவது ஒருபோதிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் இல்லை.

உதாரணத்திற்கு 13 ஆவது திருத்தத்தை எடுத்துக் கொண்டால் இந்தியா அதனை வலியுறுத்துவதற்கான பிரதான காரணம் அவர்களுடைய பயம். 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் நிராகரித்தால் அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையே சிறிலங்கா நிராகரிப் பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்கும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. விசேடமாக ஒப்பந்த இணைப்புகளில் ரஜீவ் - ஜே.ஆர். இடையே பரிமாறப்பட்ட கடிதங்கள் இணைக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சிறிலங்கா இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயத் துக்கு வாக்குறுதிகள் வழங்கியிருக்கிறது. ஆனால் எங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும் 13 ஆவது திருத்தத்துக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துச் சொல்லி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் அதே நேரம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கமுடியாது என்பதனை நாங்கள் தெளிவாக கூறவேண்டும்.

முற்று முழுதாக தமிழ் மக்களுடைய நலன்களை கைவிட்டு இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் பேகும் செயற்பாடுகளை ஏற்க முடியாது. அந்த ஒரு விடயத்தில் மட்டும் தான் கடுமையாக விமர்சித்து வருகின்றோம். எங்களுடைய நலன்களை கைவிட்டு விட்டு வேறு ஒரு தரப்பினரது நலன்களுக்காக முடிவுகளை எடுப்பது என்பது ஏற்கமுடியாத விடயம்-என்றார். (அ-02)

## லொஹானின்...

பெற்று வரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரது மனைவிக்கு எதிரான வழக்கு நேற்று நுகேகொடை நீதிவான் நீதிமன் றில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட நிலையில் இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதி, மிரிஹான பகுதியில் உள்ள அவரது மனைவியின் இல்லத்திலிருந்து இலக்கத் தகடு இல்லாத கார் ஒன்று மீட்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட்டார்.

கண்டி - கட்டுகஸ்தொட்டை பகுதி யில் வைத்து கைது செய்யப்பட்ட அவர், கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு, நுகேகொடை - கங்கொடவில மேலதிக நீதவான் சஞ்சய லக்மால் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டார்.

அவரை நேற்று வரை விளக்கமறிய லில் வைக்குமாறு இதன்போது நீதவான் உத்தரவிட்டிருந்த நிலையில் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்த மாதம் முதல் 5 நாட்களில் 30,620 சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, நவ. 08

இவ்வருடத்தில் நவம்பர் மாதத்தின் முதல் ஐந்து நாட்களில் 30, 620 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ள தாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்த நிலை யில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 7, 785 ஆகும்.

இந்த நிலையில், ரஷ்யாவிலிருந்து 4,488, ஜேர்மனியிலிருந்து 2,752, ஐக்கிய இராச்சியத்திலிருந்து 1,821, அவுஸ்தி ரேலியாவிலிருந்து 1,227 , சீனாவிலி ருந்து 1,076 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் ஒரு கோடியே 65 இலட்சத்து 1,335 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் 2 இலட்சத்து 8 ஆயிரத்து 253, பெப்ரவரியில் 2 இலட்சத்து 18 ஆயிரத்து 350, மார்ச்சில் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 181, ஏப்ரலில் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 867, மேயில் ஒரு இலட் சத்து 12 ஆயிரத்து 128, ஜூனில் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 470, ஜூலையில் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 810, ஒகஸ்டில் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 609, செப்ரெம்பரில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 140, ஒக்ரோபரில் ஒரு இலட் சத்து 35 ஆயிரத்து 907 சுற்றுலா பயணி களும் வருகை தந்துள்ளனர். (எ)

## தமிழர் தேசத்தை...

அந்தப் பூகோள ஆதிக்கப் தமிழ் மக்களுக் கும் காத்திரமான இடமுண்டு. அப்போட் டிஆடாக தமிழர்களுக்கு கிடைக்கும் முக்கியத்துவமானது, தமிழர்களுக்கான நிரந்தர பேரம் பேசும் சக்தியாகும். இதனை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களின் அரசியல் நலன்களை முன்னி லைப்படுத்தி சர்வதேச அரசியலை கையாளுமிடத்து தமிழ்த் தேசத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது எமது திடமான நிலைப்பாடாகும். தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்பட்டு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வு மூலமே உறுதிப்படுத்தப்பட முடியும்.

13ஆம் திருத்தச் சட்டத்தை இனப் பிரச்சனை தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியாக வேனும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

கடந்த 2017 செப்ரெம்பர் 21இல் வெளியிடப்பட்ட புதிய ஏக்கிய இராச் சிய (ஒற்றையாட்சி) அரசமைப்புக்கான இடைக்கால வரைவை முற்றாக நிராகரிக் கிறோம்.

தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக் கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் பிரகாரம், இணைந்த வடக்கு - கிழக்கை தாயக மாகக் கொண்டு தமிழ் மக்களை, தனித்து வமான இறைமை கொண்ட தேசமாக அங்கீகரித்து அதன் தனித்துவமான இறை மையையும், சர்வதேச சட்டங்களின் அடிப்படையில், தமிழ் மக்களுக்குள்ள சுயநிர்ணய உரிமையின் பிரகாரம், தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக தொடர்ந்து போராடு வோம்.

மலையக தமிழர்கள், முஸ்லிம்கள் தாம் சுயநிர்ணய உரிமையை கோர உரித் துடையவர்கள் என்ற கோரிக்கைகளை முன்வைப்பின், நாம் அதனை ஏற்றுக் கொள்வோம். ஆனால், சுயநிர்ணய உரிமை அரசியலை முன்னெடுப்பதா? இல்லையா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக அவர்களுடன் கைகோத்து ஒன்றாக பயணிப்பதற்கு நாம் என்றும் தயாராகவே உள்ளோம்.

மேலும், இலங்கை அரசமைப்பில், அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான தனிமனிதனுடைய பேச்சுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்துகின்ற வகையில் இணைக் கப்பட்டுள்ள 1983ஆம் ஆண்டின் 6ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

தமிழ் மக்கள் மீது இனவழிப்பு, மானுட குலத்துக்கு எதிரான குற்றம் மற்றும் போர் குற்றங்கள் புரியப்பட் டுள்ளமை வெளிப்படையானதே. இந்தக் குற்றங்கள் தொடர்பாக காத்திரமான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை அல்லது விசேட தீர்ப்பாயம் மூலமான விசாரணையையே வலியுறுத் துகின்றோம்.

எனினும், தமிழ் மக்களின் விருப்பங்க ளுக்கு மாறாக வட, கிழக்கில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆதரவுடன் உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட் டது. இதன் காரணமாக இனப்படு கொலையாளிகள் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளனர். இனியும் பொறுப்புக்கூறல் விவகாரத்தை ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்காமல் உடனடியாக சர்வதேச குற்றவியில் நீதிமன்ற விசாரணைக்குப் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அதற்கான அழுத்தங்கள் தொடர்ந்து வழங்கப்படும்.

தவிர, வடக்கு - கிழக்கு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகட னப்படுத்தப்பட்டு, அதனை மீளக் கட்டியெழுப்புதல் (பொருளாதாரம், மனிதவளம்) நிலையான அபிவிருத்தி, இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு என்பவற்றை மேற்கொள்வதற்குத் தேவை யான நிதியை கையாளும்முகமாக, வடக்கு-கிழக்கில் ஒரு பொதுக் கட்ட மைப்பு உருவாக்கப்பட்டு, அதற்கான நிதி நேரடியாகக் கிடைப்பதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், விவசாயம், சுதேச கைத் தொழில், தமிழ்ர் மொழி - கலை - பண் பாட்டு அபிவிருத்தி, மீன்பிடித் துறை அபிவிருத்தி, கல்வி என்பன குறித்தும் முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடை சட்டம் நீக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோருக்கு நீதி, தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற்றம், அரச - தனியார் காணிகள் விடுவிப்பு, திட்ட மிட்ட சிங்கள - பௌத்த மயமாக்க லுக்கு எதிர்ப்பு என்பன குறித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் அறிக்கை அக்கறை செலுத்தியுள்ளது.

தவிர, இன விடுதலைப் போராட் டத்தை ஆவணப்படுத்துதல், தமிழகம், புலம்பெயர் மக்களுடனான உறவை மேம்படுத்தல், தமிழருக்கான வெளியு றவுக் கொள்கை என்பவை குறித்தும் வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், உடனடி வாழ்வாதார பிரச்னை, அபிவி ருத்தி போன்ற அனைத்து விவகாரங்க ளையும் கையாள தமிழ்த் தேசியப் பேரவை என்ற கட்டமைப்பை வலுப்படுத்தவும் இந்தப் பேரவையே எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அதியுயர் அதிகார சபையாக செயல்படும் விதமாக மாற்றப்படும் - என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ)

## வீட்டின்மீது பெற்றோல் குண்டு தாக்குதல்!

திருகோணமலை, நவ. 08

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவில் இலங்கைத்துறை பகுதியிலுள்ள வீடொன்றின்மீது நேற்று அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் வீட் டின் உடைமைகளுக்கு சேதம் ஏற்பட் டுள்ளது.

முன் பகை காரணமாக இவ்வாறு தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## இணையவழி...

முறைப்பாடுகள் வந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத நபர்கள் மூலமாக அனுப்பப்படும் லிங்குகளை கிளிக் செய்யவோ, அல்லது ஓ.ரி.பி. அல்லது கடவுச் சொற்களை வேறு நபர்களுக்கு பகிரவோ, குறுஞ்செய்தி, வாட்ஸ்அப் செய்திகள் மூலம் அனுப்பப் படும் நிதி உதவிக்கான கோரிக்கைகளுக் குப் பதிலளிக்கவோ வேண்டாம் என்றும் பொதுமக்களை கேட்கப்பட்டுள்ளது.

## ஐ. எம். எவ்...

மூன்றாவது மதிப்பாய்வை முடிக்க அண்ணளவாக மூன்று மாதங்கள் ஆகும்.

இரண்டு தேர்தல்கள் காரணமாக மூன்றாவது பரிசீலனை தாமதமாகியுள் ளது. மூன்றாவது மீளாய்வை முன்னதாக திட்டமிட்டபடி செப்ரெம்பரில் ஆரம் பித்திருந்தால், டிசெம்பருக்குள் அதனை முடித்திருக்க முடியும்.

மூன்றாவது தவணையைப் பெற்ற பிறகு ஓரளவு பொருளாதார ஸ்திரத் தன்மையை அரசாங்கம் எதிர்பார்த் துள்ளது-என்றார். (அ)

## ரணிலை...

விடுத்தவேளை, அவர் உணவகம் ஒன்றை ஆரம்பிக்கப் போகின்றாரோ என நினைத்தேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளிடம் சொகுசு வீடுகள், தனிப்பட்ட பாதுகாப்பு அதி காரிகள் மற்றும் சொகுசு வாகனங்கள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன.

நாம் அரசியலை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். அதனை தான் தேசிய மக்கள் சக்தி செய்யவுள்ளது.

அரசியல் என்பது நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். அதற்கு மாறாக சட்டத்தை மீறி செயற் படக்கூடாது. அப்படி ஒரு நாட்டை தான் தேசிய மக்கள் சக்தி உருவாக்கவுள்ளது- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# நெல் சந்தைப்படுத்தல் சபையே அரிசி தட்டுப்பாட்டுக்கு காரணம்

## ஆலை உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 08

**நெல் சந்தைப்படுத்தல் சபையின் அசமந்த போக்கு காரணமாகவே அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டதாகச் சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் தலைவர் யூ.கே சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுபோகத்தின்போது நெல் சந்தைப்படுத்தல் சபையோ அல்லது வேறு எந்த அரச நிறுவனமோ விவசாயிகளிடம் இருந்து நெல்லை உரிய வகையில் கொள்வனவு செய்யவில்லை.

இதன் காரணமாகவே, சந்தையில் அரசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. நெல் கையிருப்பு இருந்திருக்குமாயின் சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது-என்றார். (அ)

## உயர்தரப் பரீட்சை நவ. 25இல் ஆரம்பம்

கொழும்பு, நவ. 08

2024ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களின் அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை அந்தந்த பாடசாலை அதிபருக்கும், தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டை மற்றும் நேர அட்டவணை அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அஞ்சல் மூலமாக அனுமதி அட்டைகளை பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான றறற.னழநநெவள.டம இலிருந்து நவம்பர் 18ஆம் திகதி முதல் அவற்றைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அனைத்து பரீட்சார்த்திகளும் http://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்தில் நவம்பர் 18ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை திருத்தங்களைச் செய்யலாம் எனவும், பரீட்சை நிலையங்கள் மாற்றப்படமாட்டாது எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## அரச நிர்வாக சேவைகளில் ஆயிரத்து 200 வெற்றிடங்கள்

கொழும்பு, நவ. 08

பொது நிர்வாக சேவை உள்ளிட்ட பல அரச நிர்வாக சேவைகளில் 1200-இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது நிர்வாக சேவை மற்றும் கணக்காய்வு சேவைகளிலேயே அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றன.

குறித்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் பெறுபேறுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பொறியியல் துறையிலும் 250இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த அனைத்து வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை துரித கதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

## தேர்தலில் வாக்களிக்க விடுமுறை வழங்கப்படாமை குறித்து முறையீடு!

கொழும்பு, நவ. 08

தேர்தல் ஆணைக்குழு
Election Commission

பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கு போதுமான விடுமுறை பெற்றுக்கொடுக்கப்படவில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

1981 ஆம் ஆண்டு முதலாமிலக்க தேர்தல் சட்டத்தின் 122 ஆவது சரத்திற்கு அமைவாக வாக்களிப்பதற்கு தமது ஊழியர்களுக்கு போதுமான விடுமுறையை வழங்கவேண்டும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சம்பளம், தனிப்பட்ட விடுமுறை இழப்பின்றி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கவேண்டும் என தேர்தல் ஆணைக்குழு கடந்த 2ஆம் திகதி அறிவித்திருந்தது.

வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்குமாறு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் கட்டாயம் விடுமுறை வழங்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறை அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விசேட விடுமுறையாக கருதவேண்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு குறைந்தபட்சம் 4 மணித்தியாலங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் சம்பளத்தை குறைக்காது விசேட விடுமுறை வழங்கப்படவேண்டும் எனவும் தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. (அ)

## அஸ்வெசும நிறுத்தப்படாது

கொழும்பு, நவ. 08

அஸ்வெசும கொடுப்பனவு நிறுத்தப்படமாட்டாது, அது தொடர்ந்து வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

குறித்த நிவாரண திட்டத்தின் பெயரைக்கூட மாற்றும் எண்ணம் இல்லை எனவும், கொடுப்பனவு வழங்கலின் போது அநீதி இழைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மேன்முறையீடு செய்ய மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

அத்துடன், வங்கிக் கணக்கு இல்லாததால் ஒரு தரப்பினருக்கு அஸ்வெசும கிடைப்பதில்லை, வங்கிக் கணக்கை திறப்பதற்கு தேசிய அடையாள அட்டை இல்லை. அந்த பிரச்னையும் தீர்க்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

## ஓடும் ரயிலில் செல்பி எடுத்தவர் விழுந்து காயம்!

கொழும்பு, நவ. 08

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி சென்ற ரயிலில் அமெரிக்க பெண் ஒருவர் செல்பி எடுத்த போது ரயிலில் இருந்து தவறி விழுந்து காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.